செ.வெ.எண்: 15/ 2020 நாள்: 13.03.2020

# திருப்பூர் மாவட்டம்

## அண்ணாமேலாண்மை பயிற்சி நிலையம் மற்றும் பவானி சாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையம் இணைந்து நடத்தும் இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர்களுக்கான சுருக்கப்பட்ட அடிப்படை பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் துவக்கி வைத்தார்.

திருப்பூர் தெற்கு வட்டம், ஏஞ்சல் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரி கலையரங்கில், அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையம் மற்றும் பவானி சாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையம் இணைந்து நடத்தும் திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்ட இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர்களுக்கான 37 நாட்கள் நடைபெறும் சுருக்கப்பட்ட அடிப்படை பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் க.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப. அவர்கள் இன்று (13.03.2020) துவக்கி வைத்து பேசுகையில்,

தமிழக அரசு அலுவலகங்களில், இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர்களாக பணிபுரிபவர்கள் மாவட்ட அளவில், பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலைய விடுதியில் தங்கி அடிப்படை பயிற்சி பெற வேண்டி உள்ளவர்களின் நிலமையினை புரிந்து இப்பயிற்சியினை எளிதாக்கும் வகையில், பரவலாக்கப்பட்ட பயிற்சி வகுப்பினை அந்தந்த மாவட்டங்களில் குடியிருப்பு அல்லாத ( NON- RESIDENTIAL) 37 பணி நாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படை பயிற்சியாக நடத்திட திட்டமிட்டதன் அடிப்படையில், இன்று (13.03.20) திருப்பூர் மாவட்டத்தில், துவங்கப்பட்டுள்ள பயிற்சி வகுப்புகளை சேர்த்து 15 மாவட்டங்களில் துவங்கப்பட்டு 7 மாவட்ட இளநிலை உதவியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் பயிற்சியினை நிறைவு செய்துள்ளார்கள் என்பது குறிப்பிடதக்கது. மேலும், அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையம் மற்றும் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையம் இணைந்து திருப்பூர் மாவட்டத்தில் பணிபுரியும் 163 இளநிலை உதவியாளர்கள் மற்றும் உதவியாளர்களுக்கும், அதே போல் ஈரோடு மாவட்டத்தில், பணிபுரியும் 140 இளநிலை உதவியாளர்கள் மற்றும் உதவியாளர்களுக்கும் என மொத்தம் 303 அலுவலர்களுக்கான சுருக்கப்பட்ட அடிப்படை பயிற்சி வகுப்பு இன்று (13.03.2020) முதல் வருகின்ற 29.04.2020 37 பணி நாட்கள் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிக்கென மாவட்ட வருவாய் அலுவலர் உட்பட பல்வேறு துறைகளில் சிறப்பாக பணிசெய்து ஓய்வு பெற்ற பயிற்றுனர்கள் (cadre of deputy collectors) அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தால் தேர்வு செய்யப்பட்டு அவர்கள் இன்று முதல் பயிற்சியில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்க உள்ளனர். இப்பயிற்சியில், அலுவலக நடைமுறை, பணி நடைமுறை, பொதுமக்கள் தொடர்பு, ஊரக வளர்ச்சி, கணக்கு மற்றும் கணினி பயிற்சி போன்ற பாட திட்டங்கள் வழங்கப்படவுள்ளது. எனவே, அரசு அலுவலர்கள் அனைவரும் இப்பயிற்சி வகுப்பு மூலம் அனைத்து அலுவல் சார்ந்த நடைமுறைகளை கற்றுக்கொண்டு பொதுமக்களுக்கு விரைந்து அரசின் சேவைகளை வழங்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் இஆப, அவர்கள் தெரிவித்தார்.

இந்த பயிற்சி வகுப்பு துவக்க விழாவில், மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர்.ஆர்.சுகுமார், கூடுதல் இயக்குநர் (பொ)/திறன் மேம்பாட்டு பயிற்றுனர் அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையம் திரு.எஸ்.ராஜேந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொ) திரு.சாகுல் ஹமீது, மாவட்ட வருவாய் அலுவலர் (ஓய்வு) திரு.எஸ்.பழனி துணை ஆட்சியர் (பயிற்சி) திருமதி.விஷ்னுவர்தினி, ஏஞ்சல் பொறியியல் கல்லூரி முதல்வர் திரு.சக்திவேல், திருப்பூர் தெற்கு வட்டாட்சியர் திரு.சுந்தரம் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**